STC.942/2018

23.10.2021

எ.த.சா.1- குமார்

புகார்தாரர் தரப்பில் குறுக்கு விசாரணை

புகார்தாரருடைய தாயார் என்னுடைய கடையில் 5 வருடமாக வேலை செய்தார். நகையை புகார்தாரருடைய தாயாரிடம் வாங்கினேன். மொத்தம் 4-1/2 பவுன் நகை வாங்கினேன். அந்த நகைக்கு மதிப்பு போட்டு 50,000/- கொடுத்தேன். பாக்கி 2-1/2 நான் புகார்தாரருடைய தாயாருக்கு தரவேண்டும். புகார்தாரருடைய தாயாரிடம் நகை வாங்கியது புகார்தாருக்கு தெரியாது. பவுனுக்கு காசு வேண்டும் என்று புகார்தாரர் என்னுடைய வண்டியை பிடிங்கி வைத்துக்கொண்டார். அது சம்மந்தமாக காவல் நிலையத்தில் புகார் கொடுக்கவில்லை. புகார்தாரருடைய தாயாரிடம் நகை வாங்கியதற்கும் புகார்தாரருக்கும் சம்மந்தம் கிடையாது என்றும், நான் புகார்தாரரிடம் 3 லட்சம் கடன் வாங்கினேன் என்றும் அதற்காக தான் வழக்கு காசோலை நான் கொடுத்தேன் என்றால் சரியல்ல. வண்டியை பிடிங்கி வைத்ததனால் வண்டியை வாங்குவதற்கு எம்டி காசோலையை கையெழுத்து செய்து, பன்னீர் என்பவரிடம் கொடுத்தேன். 2-1/2 பவுன் நகைக்கு எவ்வளவு மதிப்போ அவ்வளவு மதிப்பிற்கு காசோலை கொடுக்காமல் ஏன் வெற்று காசோலை கொடுத்தீர்கள் என்றால் நம்பிக்கையின் அடிப்படையில் கொடுத்தேன். நகைக்காக வழக்கு காசோலை கொடுத்தேன் என்றால் பொய் என்றால் சரியல்ல. வண்டிக்காக காசோலை கொடுத்தேன் என்று கூறுவது பொய்என்றால் சரியல்ல, மேட்டுப்பாளையம் பரோடா வங்கி காசோலையை கொடுத்தேன். அந்த காசோலை எண்.24, வழக்கு காசோலை எண்.24 என்றும், மேற்படி சங்கதி பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. மார்ச் 2018 ல் புகாரை புகார்தாரர் என் மீது கொடுத்தார். தா.பேட்டையில் புகார்தாரர் என்னிடம் தகராறு செய்தார் என்று பொய்யாக கூறியுள்ளேன்

என்றால் சரியல்ல. பன்னீர்செல்வத்திடம் ஏன் காசோலையை புகார்தாரரிடம் கொடுத்தீர்கள் என்று கேட்டதற்கு என்னிடமிருந்து காசோலையை புகார்தாரர் வாங்கி சென்றதாக பன்னீர்செல்வம் எப்போது வேண்டுமானலும் நீதிமன்றத்திற்கு வந்து சாட்சி சொல்கிறேன் என்று சொன்னார். என் மனைவிக்குஉடல்நிலை சரியில்லை என்பதற்காகவும், என் மகனுக்கு படிப்பு செலவிற்காக பணம் வாங்கினேன் என்றால் சரியல்ல. என் மனைவிக்கு உடல்நிலை நன்றாக உள்ளது. வழக்கு காசோலையை நான் பூர்த்தி செய்து 3,25,500 கடன் மற்றும் வட்டிற்காக கொடுத்தேன் என்றால் சரியல்ல. புகார்தாரர் ஆர்டிங்க் டிரைவராக அப் அப்போது வருவார். நிரந்தரமாக லாரி டிரைவராக உள்ளார். புகார்தாரரிடம் வாங்கிய கடனை மோசடி செய்வதற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.